தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 4, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஜனவரி 17, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு."

நன்மை தீமை எனும் இரண்டின் பாகுபாடுகளை ஆராய்ந்தறிந்து, இவ்வுலகத்தில் மிகுதியான அறத்தை மேற்கொள்ளும் சீரியோரின் சிறப்பே, உலகில் மிகச் சிறந்தது ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா எண் 1,* திரு. *எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

1—

குளம் தூர்வாருதல்

***3989—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் தொகுதியிலுள்ள கம்பனேரி–நாராயணப்பேரி குளத்தைத் தூர்வாரி கரையை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2006 ஜனவரி 17

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்விரு கண்மாய்களும் நடப்பு நிதியாண்டில் பராமரிப்பு நிதியின்கீழ் தூர்வாரி மேம்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. எம். சுப்பையா பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஒப்புடன் முகம லர்ந்து உபசரித் துண்மைபேசி
உப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே அமிர்தமாகும்
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவாராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி யாகுந் தானே"

என்பது போல, எல்லாத் திருக்கோயில்களுக்கும் அன்னதானத் திட்டத்தைப் புன்முறுவலோடு வழங்கி, இன்றைக்கு நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—இந்த 2006 பொங்கல் திருநாளைத் தொடர்ந்து மீண்டும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக அமர்வார் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்களைச் சொல்ல எனக்கு வயதில்லை; அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சக சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் தங்களுக்கும் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குளத்திற்குத் தூர்வாருங்கள். (சிரிப்பு)*

திரு. எம். சுப்பையா பாண்டியன்: *வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் எத்தனையோ அருவி மாதிரிக் கொட்டுவீர்கள் பேசி. எத்தனையோ நதிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன, வரலாற்றிலே, இந்தியாவிலே, உலக அளவிலே. ஆனால், உப நதிகள் எத்தனையோ ஓடுகின்றன. அந்த உப நதிகளில் நான் ஒன்றாகக் கருதி, இன்றைக்கு ஓடுகின்ற நதிகள் குறித்து ஒரே ஒரு கருத்தைக் கூறுகின்றேன். நாட்டிலே 59 நதிகள் ஓடுகின்றன. கங்கை, நர்மதை, மகாநந்தா, வோல்கா, நைல், அவ்வங்கா, துங்கபத்திரா, பொன்னையாறு, அமேசான், வெனீஸ், டர்வன்ட், ரோன், வைகை, யங்டி சி கியாங், ரைன், கோதாவரி, நைஜர், ஐராவதி, ரவி, கிருஷ்ணா,*

2006 ஜனவரி 17]

சீனம், ஜீலம், லேனா, ஆமுர், ஷானன், பெரியாறு, சட்லெஜ், பியாஸ், செயின்ட் லாரன்ஸ், பாக்மதி, டைகிரீஸ், சுவர்ணலேகா, கொலம்பியா, டீஸ்டா, கொய்னா, ஷரவதி, திரிபுரா நதிகள், மகாநதி, ஆப், மையூர், தாமிரபரணி, நைசார், மாவிலி கங்கை, பீமா, பிராஹ்மிணி, வைதரிணி, கொலரேடோ, மெக்கன்சி, சிந்து, மிசிசிபி–மிசௌரி, டார்லிங், தொவ்வா, மால்டௌ, கெடிலம், மலட்டாறு, காவிரி, யமுனை, சரஸ்வதி, பிரம்மபுத்திரா என 59 நதிகள் ஓடுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு மிகுந்த பாராட்டுக்கள். (குறுக்கீடு) எல்லா நதிகளையும் தமிழகத்திற்குக் கொண்டு வாருங்கள்.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: நன்றி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல உப நதிகள் எத்தனையோ இருக்கின்றன. அதிலே நான் ஒரு உப நதி என்பதைக் கூறிக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பனேரி குளம் 341.36 ஏக்கரும், நாராயணப்பேரி குளம் 144.56 ஏக்கரும் நிலப்பரப்பு பாசன வசதி கொண்டவையாகும். இவற்றை நம்பி விவசாயிகள் உள்ளனர். இந்தக் குளங்களைத் தூர்வாரி சுமார் 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பாக ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் இந்த வேளையில், மேற்கண்ட இரண்டு குளங்களையும் தூர்வார நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள இரண்டு குளங்களும், கடையநல்லூர் தொகுதியிலுள்ள கம்பனேரி பெரிய குளம் மற்றும் நாராயணப்பேரி குளம் ஆகிய இரண்டும் கருப்பா நதியிலிருந்து நீர் பெறும் முறைப்படுத்தப்பட்ட system tank கண்மாய்கள் ஆகும். கம்பனேரி பெரிய குளத்தைத் தூர்வாரி மேம்பாடு செய்ய ரூபாய் 5 இலட்சமும், நாராயணப்பேரி குளத்தைத் தூர்வாருவதற்கு ரூபாய் 3 இலட்சமும் ஒதுக்கப்பட்டு நடப்பு நிதியாண்டில் பராமரிப்புத் தலைப்பின்கீழ் அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கருப்பா நதி அணை நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ், முறைப்படுத்தப்பட்ட பாசனக் கண்மாய்கள் மட்டும் 72 ஆகும். கடந்த 5 ஆண்டுகளில் 3.5 இலட்சம் ரூபாய் செலவில் இந்த நீர்ப்பாசனத்

திட்டத்தில் கண்மாய்கள் சீராகப் பராமரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. மேலும், நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டம் பகுதி–2–ன்கீழ் 72 கண்மாய்கள் 20 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். சுப்பையா பாண்டியன்.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் ஒட்டுமொத்தப் பாதுகாவலராக விளங்கிக்கொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

மதுபானக் கடைகள்

***34513—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் புதிய உரிமம் முறைமூலம் கூடுதல் மதுபானக் கடைகள் அமைக்கப்பட்டு வருவாய் அதிகரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: (அ) மற்றும் (ஆ) மதுபான மொத்த விற்பனையைத் தமிழ்நாடு வாணிபக் கழகமும், சில்லறை விற்பனையைத் தனியாரும் நடத்திக்கொண்டிருந்த நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் 29–11–2003 முதல் சில்லறை